பக்கங்கள்: 06

காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2052 தை 15 வியாழக்கிழமை 28.01.2021 கதிர் 315

## 2 கிலோ கஞ்சாவுடன் யாழில் மூவர் கைது!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸாரின் விசேட சுற்றிவளைப்பின்போது 2 கிலோ கஞ்சாவுடன் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

2

# ‘மொட்டு’ கட்சி மீது மைத்திரி கடும் அதிருப்தி!



ஆளுங்கூட்டணியிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு உரிய கவனிப்பு இல்லை. ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் பிரகாரம் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி செயற்படவில்லை.

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியால், தமது கட்சிக்கு அநீதி இழைக்கப்படுகின்றது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகரவால் முன்வைக்கப்பட்டுவரும் குற்றச்சாட்டு தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மைத்திரிபால சிறிசேன

2

## கறுப்புப்பட்டி அணிந்து மாபெரும் போராட்டம்!

### வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தமிழ் மக்களுக்கு அழைப்பு

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு கறுப்புப் பட்டி அணிந்து

2

# கொரோனாவுக்கு முடிவுகட்ட வந்தன 5 லட்சம் தடுப்பூசிகள்

### கட்டுநாயக்கவில் வைத்து பொறுப்பேற்றார் கோட்டா






**இந்திய மத்திய அரசின் அன்பளிப்பாக இலங்கைக்கு வழங்கப்பட்ட கொரோனாத் தடுப்பூசிகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துப் பொறுப்பேற்றார்.**

2

## பூசகருக்குக் கொரோனாத் தொற்று; கதிர்காமம் வள்ளியம்மனுக்குப் பூட்டு

கதிர்காமம் ஸ்ரீ வள்ளியம்மன் ஆலயப் பிரதம பூசகருக்கும், அவரது மனைவிக்கும் கொரோனா வைரஸ் தொற்றியிருப்பது பி.சி.ஆர். பரிசோதனை மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது என்று கதிர்காமம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சமன் திஸாநாயக்க தெரிவித்தார்.

2

## விகாரையில் கொள்ளை முயற்சி: 5 பிக்குகள் உட்பட எழுவர் கைது!

கதிர்காமம் மலைப்பகுதி ரஜமகா விகாரை தலைமைப் பிக்குவைக் கொலை செய்து அவரின் உடைமைகளைக் கொள்ளையிட முயற்சித்த 5 இளம் பிக்குகள் உள்ளிட்ட 7 பேரை கதிர்காமம் பொலிஸார் இன்று கைதுசெய்துள்ளனர்.

2

## நெல்லியடியில் நள்ளிரவு கோர விபத்து ஒருவர் மரணம்; மற்றொருவர் படுகாயம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ். வடமராட்சி, நெல்லியடிப் பகுதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்த கப் வாகனம் விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

2

## 180 அடி பள்ளத்தில் வீழ்ந்தது ஓட்டோ; மீன் வியாபாரி ஒருவர் பரிதாபப் பலி



பதுளை மாவட்டம், அப்புத்தளைப் பொலிஸ் பிரிவுக்குப்பட்ட பெரகல கீழ் பிளக்வூட் பகுதியில் ஓட்டோ ஒன்று 180 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் 28 வயது இளைஞர் ஒருவர் சம்பவ

2

## தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் நாளை முதல்; விருப்பமில்லாதவர்கள் தவிர்ந்திருக்க முடியும்

### ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவிப்பு

இந்திய மத்திய அரசு அன்பளிப்பாக வழங்கிய கொரோனாத் தடுப்பூசிகளை ஏற்றும் நடவடிக்கை மேல் மாகாணத்தின் 6 முக்கிய வைத்தியசாலைகளில் நாளை முதல் ஆரம்பிக்கப்படும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

5 லட்சம் தடுப்பூசிகள் இந்திய விமான சேவைக்குச் சொந்தமான விமானத்தில் இன்று கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தன.

விமானத்தின் விசேட குளிரூட்டியில் களஞ்சியப்படுத்தப்பட்டு கொண்டுவரப்பட்ட

2

## விஸ்வரூபம் எடுத்து வரும் தமிழின அழிப்புக்கு எதிராக பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை போராட்டம்

### வடக்கு, கிழக்கு சிவில் சமூக அமைப்புகள் கூட்டாக அழைப்பு

வடக்கு, கிழக்கில் விஸ்வரூபம் எடுத்து வரும் தமிழின அழிப்புக்கு எதிராகப் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு வடக்கு, கிழக்கு சிவில் சமூக அமைப்புகள் கூட்டாக அழைப்பு விடுத்துள்ளன.

எதிர்வரும் 3 ஆம் திகதி முதல் 6 ஆம் திகதி வரை மேற்கொள்ளவுள்ள இந்தப் போராட்டம் தொடர்பில் சிவில் சமூக அமைப்புக்கள் இன்று விடுத்துள்ள அழைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு, கிழக்கில் விஸ்வரூபம் எடுத்து வரும் தமிழின அழிப்புக்கு எதிராக பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான போராட்டத்தை முன்னெடுப்பதற்குத் தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் ஒன்றுதிரளுமாறு வடக்கு, கிழக்கு

2

## கொரோனாவை முறையாகக் கையாண்ட நாடுகள் பட்டியலில் இலங்கை 10ஆம் இடம்

உலகளாவிய கொரோனா வைரஸ் பரவலை முறையாகக் கையாண்ட நாடுகளின் பட்டியலில் இலங்கைக்கு 10 ஆவது இடம் கிடைத்துள்ளது.

ஆஸ்திரேலியாவின் லொவி நிறுவனம் மேற்கொண்ட ஆய்விலேயே இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

கொரோனாவை முறையாகக் கையாண்ட நாடுகளில் முதலாவது இடத்தில் நியூசிலாந்தும், இரண்டாவது இடத்தில் வியட்நாமும், மூன்றாவது இடத்தில் தாய்வானும் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

உலகின் நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளின் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை, உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை,

2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


## விகாரையில் கொள்ளை முயற்சி: ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கைதுசெய்யப்பட்ட பிக்குகள் 5 பேரும் அநுராதபுரத்தின் விகாரையொன்றைச் சேர்ந்தவர்கள் என்று ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இது குறித்து கதிர்காமம் மலைப்பகுதி ரஜமகா விகாரை தலைமைப் பிக்கு ஹல்லே ஞானத்திர தேரரிடம் பொலிஸார் வினவியபோது, என்னைக் கொலை செய்து எனது உடைமைகளைக் கொள்ளையிடவே முயற்சி மேற்கொள்ளப்பட்டது என அறிகின்றேன் என்று மாத்திரம் கூறினார்.

கதிர்காமம் மலைப்பகுதி ரஜமகா விகாரை தலைமைப்பிக்குவின் அறையை உடைத்து உட்புக முயற்சித்தபோதே பாதுகாப்புக் கடமைகளில் இருந்த பொலிஸாரும் இராணுவத்தினரும் மேற்படி 5 இளம் பிக்குகள் உள்ளிட்ட 7 பேரையும் கைதுசெய்தனர்.

அத்துடன் அவர்களிடமிருந்த ஆயுதங்களையும் பொலிஸார் மீட்டனர். இது தொடர்பாக கதிர்காமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உபுல் லியனகே தலைமையிலான குழுவினர் தீவிர புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## பூசகருக்குக் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதையடுத்து பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் உடனடி உத்தரவின் பேரில் ஸ்ரீ வள்ளியம்மன் ஆலயம் இன்று முதல் மீள் அறிவித்தல் வரும் வரையில் மூடப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த 15 நாள்களில் இந்த ஆலயத்துக்கு வந்து வழிபாடு நிகழ்வுகளில் கலந்துகொண்டுத் தத்தம் ஊர்களுக்குச் சென்றவர்கள் மற்றும் கதிர்காமத்திலிருந்து இந்த ஆலயத்துக்கு வந்து சென்றவர்கள் அவ்வப்பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதர்களிடம் உடன் அறிவிக்கும்படி கதிர்காமம் பொதுச் சுகாதாரப் பிரிவினரால் கேட்கப்பட்டுள்ளனர்.

இந்த ஆலயப் பூசகரின் உறவினர் ஒருவரது மரணச்சடங்களில் கலந்து கொண்டிருந்தவர்களில் எவருக்கேனும் கொரோனாத் தொற்று ஏற்பட்டிருக்கலாம். அவர்களிடமிருந்து ஆலயப் பூசகருக்கும் அவரது மனைவிக்கும் கொரோனாத் தொற்று பரவியிருக்கலாம் என்ற சந்தேகமும் ஏற்பட்டிருக்கின்றது எனச் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மேலும் கூறியுள்ளனர்.

## கொரோனாவுக்கு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்தியாவின் வெக்சின் மைத்ரி திட்டத்தின் கீழ் அன்பளிப்புச் செய்யப்பட்ட ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிகள் இன்று முற்பகல் 11.35 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தன.

தடுப்பூசிகளை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவிடம் கையளித்தார்.

முதல் கட்டமாக இலங்கைக்கு 5 லட்சம் தடுப்பூசிகள் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்திய விமான சேவைக்குச் சொந்தமான எயார் பஸ் 321 விமானம் மும்பாய் விமான நிலையத்தில் இருந்து 42 பெட்டிகளில் அடைக்கப்பட்ட நிலையில், குறித்த தடுப்பூசிகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

## 'மொட்டு' கட்சி மீது ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆம். அப்படியான பிரச்சினை இருக்கின்றது. அவர் கூறிய கருத்தில் பிழை இல்லை. எமக்கான கவனிப்பில் குறை உள்ளது. ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் பிரகாரம் எதுவும் நடைபெறுவதில்லை. உரிய வகையில் செயற்பட்டிருந்தால் இப்படியான குற்றச்சாட்டுகளை முன்வைக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது.

எது எப்படி இருந்தாலும் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுப்பது பற்றியே அதிகம் கவனம் செலுத்த வேண்டும். ஜனாதிபதி மற்றும் பிரதமர் தரப்புகளில் இருந்து எமக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை. மற்றுமொரு தரப்பாலேயே பிரச்சினைகள் எழுந்துள்ளன. - என்றார்.

## 2 கிலோ கஞ்சாவுடன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து ஓர் ஓட்டோவும் மீட்கப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை மற்றும் திவிலுப்பிட்டிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே கைதாகியுள்ளனர்.

மிகவும் சூட்சுமமான முறையில் கஞ்சா வியாபாரத்தை மேற்கொண்டு வந்த நபர்கள் தொடர்பில் யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து செம்மணிப் பகுதியில் சுற்றிவளைக்கப்பட்டு மூவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தீவிர விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## நெல்லியடியில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மற்றொருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நெல்லியடி நகர் மக்கள் வங்கிக்கு முன்பாக நேற்று நள்ளிரவு 12 மணியளவில் இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் கரைவெட்டி - வதிரியைச் சேர்ந்த யோன்னாட் கரன் (வயது - 41) என்பவரே உயிரிழந்தார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த மற்றொருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவரின் சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## 180 அடி பள்ளத்தில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இடத்திலேயே பலியாகியுள்ளார். இவர் பெரகல பகுதியைச் சேர்ந்தவர் ஆவார்.

பெரகல நகரத்தில் மீன் வியாபாரியான இவர் பெரகலயிலிருந்து வீடு செல்லும் போது இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இவருடன் ஓட்டோவில் பயணித்த மற்றொரு நபரும் படுகாயங்களுடன் தியத்தலாவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். விபத்து தொடர்பான விசாரணைகளை அப்புத்தளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தடுப்பூசி ஏற்றும் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தடுப்பூசிகளின் எடை 1,323 கிலோ கிராமாகும். இந்தத் தடுப்பூசிகள் விமான நிலைய வளாகத்தில் உள்ள குளிரூட்டியில் களஞ்சியப்படுத்தப்பட்டு குளிரூட்டப்பட்ட வாகனங்களின் மூலம் 25 மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

குறித்த தடுப்பூசிகள் 2 - 8 இடைப்பட்ட டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

தடுப்பூசி ஏற்றல் மேல் மாகாணத்தின் 6 முக்கிய வைத்தியசாலைகளில் நாளை (29) ஆரம்பிக்கப்படும்.

கொரோனாத் தடுப்பு நடவடிக்கையில் முன்னின்று செயற்படும் சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் சுகாதாரப் பணியாளர்கள், ஒரு லட்சத்து 20 ஆயிரம் முப்படையினர், பொலிஸார் உள்ளிட்ட பாதுகாப்புத் துறையில் உள்ளவர்களுக்கு முதலில் தடுப்பூசி ஏற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் வேண்டுகோளுக்குப் பதிலளிக்கும் விதமாக சீன அரசும் 3 லட்சம் தடுப்பூசிகளை வழங்கவுள்ளது என கொரோனாத் தடுப்பூசி கொள்முதல் தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவரும் ஜனாதிபதியின் பிரதம ஆலோசகருமான லலித் வீரதுங்க தெரிவித்தார். தடுப்பூசி ஏற்றிக்கொள்வது தனிநபர்களின் சுயாதீனமான முடிவாகும். அதை விரும்பாதவர்கள் ஏற்றிக்கொள்ளாதிருக்க முடியும் என்றும் அவர் மேலும் கூறினார் - என்றுள்ளது.

## கறுப்புப்பட்டி அணிந்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாபெரும் அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டம் ஒன்றை எதிர்வரும் 2ஆம் திகதி ஆரம்பித்து 6ஆம் திகதிவரை நடத்தத் திட்டமிட்டுள்ளது வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் அறிவித்துள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே, வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத் தலைவி யோகராஜா கனகரஞ்சினி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்தோடு, சுதந்திர தினமான பெப்ரவரி 4ஆம் திகதி கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் இடம்பெறும் மாபெரும் நீதிப் போராட்டத்தில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

## கொரோனாவை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குணமடைந்தவர்களின் எண்ணிக்கை மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கை போன்றவற்றை மையமாகக்கொண்டே, இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவலால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள அமெரிக்கா 94 ஆவது இடத்திலும், முறையே இந்தோனேசியா மற்றும் இந்தியா ஆகியன 85, 86 ஆம் இடங்களிலும் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

## விஸ்வரூபம் எடுத்து .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சிவில் சமூக அமைப்புக்களாகிய நாம் அழைப்பு விடுக்கின்றோம்.

வடக்கு, கிழக்கு பூர்வீக குடிகளான நாம் கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக எங்களது சுயநிர்ணய உரிமைகளுக்காகப் போராடி வருகின்றோம். ஆனால், தமிழர்களின் போராட்டங்களுக்கு செவிசாய்க்காத இலங்கை அரசு தொடர்ந்தும் தமிழ் மக்கள் மீதான கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதை யாவரும் அறிவோம்.

போர் நிறைவடைந்து கடந்த பத்து ஆண்டுகளில் வடக்கு, கிழக்கை இராணுவமையமாக்கி வரும் இலங்கை அரசு தமிழ் மக்களின் கலாசாரப் பண்பாட்டு அடையாளங்களை அழிப்பதுடன் வடக்கு, கிழக்கு பூர்வீகக் குடிகளான தமிழர்களின் இனப்பரம்பலில் மாற்றத்தை உருவாக்கி அவர்களது இருப்பை இல்லாமல் செய்வதற்காகப் பல வகையிலும் கட்டமைக்கப்பட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

இதன் அடிப்படையில் தொல்பொருள் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், வனவளப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் மகாவலி அபிவிருத்தி அதிகார சபை ஊடாக பௌத்த மயமாக்கல் திட்டங்களை இலங்கை அரசானது முனைப்போடு நடைமுறைப்படுத்தி வருகின்றது.

வடக்கு, கிழக்கில் குருந்தூர்மலை ஐயனார் கோயில், வெடுக்குநாறி மலை சிவன் கோயில், நிலாவரை ஆகியவற்றுடன் கிழக்கில் கன்னியா பிள்ளையார் கோயில், முருகன் ஆலயம், வேற்றுச் சேனை சித்திவிநாயகர் ஆலயம் உட்பட்ட பல ஆலயங்களில் தமது பாரம்பரிய, கலாசார, சமய, வழிபாடுகளைச் செய்ய முடியாதவாறு ஆலயங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்படுவதோடு அங்கு பௌத்த ஆலயங்களை நிறுவுவதற்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன.

மேலும் வடக்கு, கிழக்கில் உள்ள சுமார் 200 இற்கும் மேற்பட்ட பாரம்பரிய இந்து ஆலயங்களைக் கையகப்படுத்துவதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன.

அத்துடன் மனித உரிமை மீறல்களை வெளிக்கொண்டுவரும் ஊடகவியலாளர்களும், மனித உரிமை மீறல்களுக்கு எதிராகப் போராட்டங்களை முன்னெடுத்து வரும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் அச்சுறுத்தப்படுவதுடன் அவர்கள் தொடர்ந்தும் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறான செயல்கள், செயற்பாட்டாளர்களின் பேச்சுரிமை, அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும்.

தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் சிங்களக் குடியேற்றங்களும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு மாவட்ட எல்லையில் உள்ள மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரைக் காணிகளை அபகரித்து சிங்களக் குடியேற்றம் ஒன்றை உருவாக்கும் முயற்சி நடைபெற்று வருகின்றது.

மட்டக்களப்பில் உள்ள பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் நோக்குடன் பால் தரும் பசுக்களை திட்டமிட்ட வகையில் படுகொலை செய்யும் நடவடிக்கைகளும் நடந்தேறி வருகின்றன. இதன் ஒரு கட்டமாக காடுகள் அழிக்கப்பட்டு சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இஸ்லாமிய மக்களின் மத ரீதியான பாரம்பரிய சமய சடங்கான ஜனாஸாக்களைப் புதைக்கும் செயற்பாடுகளை இல்லாமல் செய்து ஜனாஸாக்கள் எரியூட்டப்பட்டு வருகின்றன. இதற்கு எதிராகப் போராடும் முஸ்லிம் சமூகத்தையும் அரச தரப்பினர் அடக்கி ஆள முனைகின்றனர்.

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதலின் பின்னர் பலதரப்பட்ட இஸ்லாமிய மக்களைப் பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி தடுத்துவைத்துள்ளனர். இதே பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தமிழ் இளைஞர்கள் பலரையும் கைதுசெய்து பல வருடங்களாகத் தடுத்து வைத்துள்ளனர்.

இதேபோன்று சிறைகளில் விசாரணைகள் இன்றி தமிழ் அரசியல் கைதிகளாகப் பலர் உள்ளனர். ஆனால், பல குற்றவாளிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கியுள்ள அரசு, இந்த அரசியல் கைதிகளை விடுதலை செய்யத் தொடர்ந்தும் மறுப்புத் தெரிவித்து வருகிறது.

வடக்கு கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தங்களது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடி வருடக்கணக்கில் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றனர். ஆனால், அவர்களுக்கான நீதியை வழங்காது அரசு ஏமாற்றி வருகின்றது.

அத்துடன் மலையகத் தமிழ் மக்கள் தங்களது நாளாந்த வாழ்வாதாரத்துக்காக ஆயிரம் ரூபா சம்பள உயர்வு கேட்டுப் போராடி வருகின்றனர். அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றாது அரசு இழுத்தடிப்புச் செய்து வருகின்றது.

இவ்வாறு தமிழ் பேசும் மக்களின் பூர்வீக நிலங்கள் உட்பட இலங்கையில் திட்டமிட்டு நடத்தப்படும் இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகவும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்கு வடக்கு - கிழக்கு தமிழ்க் கட்சிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள், பல்சமய ஒன்றியங்கள் இணைந்து அனுப்பி வைக்கப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரியும் வடக்கு, கிழக்கு சிவில் சமூக அமைப்புக்களாகிய நாம் பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான கவனவீர்ப்பு போராட்டத்தை எதிர்வரும் 3ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளோம்.

உரிமைகளை இழந்து நீதி மறுக்கப்பட்ட சமூகமாக வாழும் தமிழ் பேசும் மக்களாகிய எமது அவலக் குரல்கள் சர்வதேசத்தின் மனச்சாட்சிகளைத் தட்டும் அளவுக்கு எமது போராட்டத்தை அஹிம்சை வழியில் முன்னெடுக்க வேண்டியுள்ளதால் அனைத்துத் தமிழ் பேசும் மக்களையும் இந்தப் போராட்டத்தில் இணைந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு சர்வதேசம் நீதியைப் பெற்றுத்தர வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து முன்னெடுக்கப்படவுள்ள மேற்படி போராட்டத்துக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வடக்கு, கிழக்கு சிவில் சமூக அமைப்புக்கள் தங்களது ஆதரவைத் தெரிவித்துள்ளன.

எனவே, அரசியல் கட்சிகள் உட்பட வடக்கு, கிழக்கில் உள்ள அனைவரும் மேற்படி போராட்டத்துக்கு ஆதரவு வழங்கி கலந்துகொள்ளுமாறு வடக்கு, கிழக்கு சிவில் சமூக அமைப்புக்களாகிய நாம் ஒன்றிணைந்து வேண்டுகோள் விடுக்கின்றோம்.

(05ஆம் பக்கம் பார்க்க)

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# இந்தியாவின் பதில் என்ன?

**இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருகை தரும் அரசுத் தலைவர்கள் – கடைசியாக கொழும்புக்கு வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் வரை – தமிழர் தரப்புகளுக்கும் தலைவர்களுக்கும் செய்யும் மகா உபதேசம் ஒன்று உண்டு.**

**அது 'நீங்கள் ஒற்றுமைப்பட்டு நிற்க வேண்டும். அப்போதுதான் உங்கள் உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.' – என்பதுதான்.**

**ஏதோ நீங்கள் ஒன்றுபட்டு, ஒரு குரலில் நிற்காதபடியால்தான் உங்களுக்குச் சரியானதை நீங்கள் பெற்றுக் கொள்ள முடியவில்லை, நாமும் பெற்றுத்தர முடியவில்லை, நீங்களும் உங்கள் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வின்றி தொடர்ந்து போராட வேண்டியிருக்கின்றது. – என்ற தத்துவம் இந்த உபதேசத்துக்குள் உட்கிடையாகப் பொதிந்து கிடக்கும்.**

**தமிழர்களின் உரிமைப் போராட்டம் ஆயுத வழிக்குத் திரும்பிய சமயம், பல ஆயுதக் குழுக்களுக்கு தஞ்சம் வழங்கி, புகலிடம் தந்து, ஒன்றுக்கொன்று முரண்பட்டு நின்ற – எதிரும் புதிருமாக முட்டி மோதிய – பல அமைப்புகளுக்கு ஒரே சமயத்தில் ஆயுதப் பயிற்சிகளை வழங்கி, அடிப்படை ஆயுதங்களை மட்டுமே அவர்களுக்குக் கிடைக்கச் செய்து, அதற்கு மேல் அந்த அமைப்புகள் ஆயுதங்களை சுவீகரிக்காமல் பார்த்துக் கொண்டு, இலங்கைக்கு – களத்துக்கு – அவற்றை அனுப்பி வைத்த புதுடில்லி ஆட்சிப் பீடமே, இந்த ஒற்றுமைப்பட்டுச் செயற்படும் தத்துவத்தை அடிக்கடி இலங்கைத் தமிழர்களுக்கு உபன்னியாசம் செய்கின்றது என்று நாம் விசனப்படுவதுண்டு.**

**ஆனால், இந்தியா உட்பட பல தரப்புகளும் இப்படி கையை நீட்டிக் குற்றம் சுமத்தும் வகையில் தமிழ்த் தேசிய சக்திகள் இனப் பிரச்சினை விவகாரத்தைக் கையாளும் விடயத்தில் பிளவுண்டு நிற்கின்றனவே என்ற ஆதங்கம் தமிழ் மக்கள் மனதிலும் நீடித்து இருந்தது என்பதும் மறுக்கக் கூடியதல்ல.**

**அந்த விசனத்துக்கு இம்முறை முடிவு காட்டியிருக்கின்றனர் தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்கள்.**

**அனைத்துத் தரப்பினரும் தத்தமது நிலைப்பாடுகளிலிருந்து அதிக விட்டுக் கொடுப்பை மேற்கொண்டு ஒன்றுபட்ட – ஐக்கியப்பட்ட – ஒரு நிலைப்பாட்டுக்கு வந்து, உலகையே மூக்கில் விரலை வைக்கச் செய்திருக்கின்றனர்.**

**தமிழ்த் தேசிய சக்திகளின் – கட்சிகளின் – பிரிந்து நிற்கும் கொள்கை நிலைப்பாட்டை நையாண்டி பண்ணி, அதனைக் காரணம் காட்டி உபதேசம் செய்தபடி ஒதுங்கி நிற்கும் சர்வதேச தரப்புகளின் வாய்ப் பேச்சுக்குப் பூட்டுப் போட்டியிருக்கின்றார்கள் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள்.**

***"நாங்கள் நமக்குள் வேறுபாடுகளைக் களைந்து, ஒன்றுபட்டு ஒரே குரலில் பேசுபவர்களாக வந்துள்ளோம். இனி உங்கள் பங்களிப்பை – கடப்பாட்டை – பொறுப்பை – பொறுப்புணர்வுடன் செய்து காட்டுங்கள்!"*** **என்ற தெளிவான செய்தியை தமது ஐக்கியப்பட்ட நிலைப்பாடு மூலம் அவர்கள் எடுத்தியம்பியிருக்கின்றனர்.**

**ஒற்றுமை குறித்து எங்களுக்கு – தமிழர் தலைவர்களுக்கு அதிக உபதேசங்களை – பிரசங்க வகுப்புகளை – நடத்தி வந்த இந்தியா இப்போது என்ன செய்யப் போகின்றது?**

**2009 யுத்தம் முடிந்ததும் 2010 ஜூனில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் கூட்டத்தில் இலங்கைப் படைகளின் மனித அழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக ஒரு பிரேரணை முன்மொழியப்பட்டது. ஆனால் மனித உரிமைகளை மீறாமல் யுத்தத்தை நடத்தி முடித்தமைக்கு இலங்கையைப் பாராட்டும் தீர்மானமாக அந்த வாசகம் மாற்றப்பட்டு, கண்டனப் பிரேரணை பாராட்டுத் தீர்மானமாக முடிந்தது. அந்த வேதனையான நடவடிக்கையின் பின்னணியில் நின்றது இந்தியாதான். இலங்கையின் யுத்த காலக் கொடூரங்களுக்காக இலங்கைக்கு விதிக்கப்பட்ட சர்வதேச வலையை முதலில் ஒட்டையாக்கிச் சேதப்படுத்தியது பாரதம்தான். இதனை இலங்கைத் தமிழர்கள் இலகுவில் மறக்க மாட்டார்கள். யுத்தத்தின் பேரிழப்புக் கொடூரங்களில் துவண்டு போய்க் கிடந்த தமிழினத்தின் ஆன்மாவில் நெற்றியடியாக – முதுகில் வீழ்ந்த குத்தாக – இறங்கியது அது.**

**சரி. அது நடந்து பதினொரு ஆண்டுகள் ஆகி விட்டன. இம்முறை இந்தியா என்ன செய்யப் போகின்றது?**

**இந்தியா பேசிய தத்துவப்படி, தமிழ்த் தேசிய சக்திகள் ஒன்றுபட்டு, ஒற்றை நிலைப்பாட்டில் உள்ளன.**

**பாரத நாடு – காந்தி தேசம் – இந்திய மண் – என்ன செய்யப் போகின்றது?**

**1987 போல இலங்கைக்கு இந்தியப் படைகளை அனுப்புங்கள் என்று தமிழர்கள் யாரும் கூறப் போவதில்லை. ஆனால் இந்தியா என்ன செய்ய வேண்டும் எனத் தமிழகத்தின் பிரதான எதிர்க் கட்சியான தி.மு.க. பிரதமர் நரேந்திர மோடிக்கு தெளிவாக எடுத்தியம்பி உள்ளது.**

**ஜெனிவாவில் போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச பொறிமுறையை நிறுவ இந்தியா வலியுறுத்த வேண்டும், அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் கீழான அதிகாரப் பகிர்வை முழுமையாக நடைமுறைப்படுத்த வற்புறுத்த வேண்டும் – இதுதான் தி.மு.கவின் கோரிக்கை.**

**இந்தியாவிடம் ஈழத் தமிழர்கள் முன்வைக்கும் கோரிக்கையும் இதுதான். இக் கோரிக்கைகளை தமிழகத்தில் தி.மு.க. மட்டுமல்ல, ஆளும் அ.தி.மு.க. உட்பட சகல கட்சிகளும் ஒன்றிணைந்து முன்வைக்க வேண்டும்.**

**இந்தக் கோரிக்கைக்கு இந்தியாவின் பதில் – பிரதிபலிப்பு – யாது?**

# குருந்தூர் மலைக்குச் சென்ற கூட்டமைப்பு எம்.பிக்களை தடுத்து நிறுத்திய இராணுவம்!



முல்லைத்தீவு – தண்ணிமுறிப்பு குருந்தூர் மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய பகுதியில் தொல்லியல் திணைக்களத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் ஆய்வு பணிகள் இடம்பெறும் இடத்துக்கு விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்துள்ளனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோரே இந்த விஜயத்தை மேற்கொண்டனர்.

குறித்த பகுதிக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவினரை அங்கு காவலில் நின்ற இராணுவத்தினர் உள்ளே செல்லவிடாது தடுத்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமது மேலதிகாரியின் உத்தரவுப்படி யாரும் உள்ளே செல்ல அனுமதிக்க முடியாது என இராணுவ முகாமின் இராணுவ அதிகாரி பணித்துள்ளார் எனத் தெரிவித்து இவ்வாறு தடை விதித்தனர்.

இதனையடுத்து அந்த இடத்திலிருந்து தொலைபேசி வாயிலாக இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவை அழைத்த நாடாளுமன்ற உறுப்பினர், விடயம் தொடர்பில் தெரியப்படுத்தியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து, தொல்லியல் திணைக்கள பணிப்பாளர் நாயகமும் தொலைபேசியூடாக சார்ள்ஸ் நிர்மலநாதனுடன் கலந்துரையாடியதன் பின்னர் தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் பங்குபற்றலுடன் அவர்கள் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ரவிகரன், கரைச்சி பிரதேச சபை தவிசாளர் உள்ளிட்டவர்களும் சென்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 1,500 இற்கு மேற்பட்டோர் ஒரே நாளில் குணமடைவு!

நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து 1,520 பேர் குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இதுவே நாளொன்றுக்கு பதிவாகிய குணமடைந்தோரின் அதிகபட்ச எண்ணிக்கை என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனை அடுத்து நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 52 ஆயிரத்து 566 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் இதுவரை கொரோனா தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 60 ஆயிரத்து 694 ஆகக் காணப்படுகின்றது.

இதில் 7 ஆயிரத்து 68 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை, 863 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் மருத்துவ கண்காணிப்பில் உள்ளனர்.

மேலும் இலங்கையில் கொரோனா தொற்றால் இதுவரை 290 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சீமெந்து ஏற்றிச் சென்ற கனரக வாகனத்தில் மோதி இருவர் பலி!





புத்தளம் பாலாவி சீமெந்து தொழிற்சாலையிலிருந்து சீமெந்து ஏற்றிச்சென்ற கனரக வாகனத்துடன் பாலாவி பகுதியிலிருந்து கல்லடி நோக்கி சென்ற மோட்டார் சைக்கிளொன்று நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து கடந்த புதன்கிழமை இரவு 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின்போது, ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளமையுடன் மற்றுமொருவர் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற வேளை உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இதன்போது வாகனத்தின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விபத்தில் உயிரிழந்தவர்கள் மானவெரி சிறாமபையடி பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய ஒருவரும், அட்டவில்லு பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய ஒருவருமே என பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

# ஐ.தே.கவின் மூத்த துணைத் தலைவர் பதவியை ஏற்க மறுத்துள்ளார் அர்ஜுன!



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த துணைத் தலைவர் பதவியை ஏற்க மறுத்துள்ளார்.

நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான முன்மொழிவை உருவாக்கக் கட்சி தவறிவிட்டது எனக் குறிப்பிட்டு அர்ஜுன ரணதுங்க கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

அத்தோடு ஐக்கிய தேசிய கட்சியின் மூத்த துணைத் தலைவராக தான் நியமிக்கப்பட்டுள்ளார் எனத் தகவல் கிடைத்ததாகவும் அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும், இந்தப் பதவியை ஏற்க வேண்டாம் என தான் முடிவு செய்துள்ளார் என அர்ஜுன ரணதுங்க, ரணில் விக்கிரமசிங்கவிற்கு தெரிவித்துள்ளார்.

# போராட்டத்திலிருந்து விவசாய சங்கங்கள் விலகல் நாடாளுமன்றம் நோக்கிய பேரணி ஒத்திவைப்பு!



டெல்லியில் நடந்த டிராக்டர் பேரணியில் வன்முறை வெடித்ததைத் தொடர்ந்து, போராட்டத்தில் இருந்து இரண்டு விவசாயச் சங்கங்கள் வெளியேறியுள்ளன.

மேலும் நாடாளுமன்றத்தை நோக்கிச் செல்லும் பேரணியையும் விவசாயிகள் நிறுத்தி வைத்துள்ளனர்.

செவ்வாய்க்கிழமையன்று டெல்லியில் நடந்த டிராக்டர் பேரணியின்போது பொலிஸாருக்கும், விவசாயிகளுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

இதில் ஏற்பட்ட வன்முறை நிகழ்வுகளால், காவல்துறையினர் 394 பேர் காயமடைந்ததாகவும், அவர்களில் சிலர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் காவல் ஆணையர் தெரிவித்துள்ளார்.

வன்முறை தொடர்பாக 25 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், 19 பேர் கைது செய்யப்பட்டு இருப்பதாகவும், 50 பேரை கைது செய்து விசாரித்து வருவதாகவும் அவர் மேலும் கூறினார்.

மேலும் டிராக்டர் பேரணியின் போது சிலர் டெல்லி செங்கோட்டையில் நிஷான் சாஹிப் எனப்படும் சீக்கிய மதக் கொடியை ஏற்றியது அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் வேளாண் சட்டங்களுக்கு எதிரான போராட்டத்தில் இருந்து விலகிக் கொள்வதாக ராஷ்டிரிய கிசான் மஸ்தூர் சங்க தேசிய ஒருங்கிணைப்பாளர் வி.எம்.சிங் அறிவித்தார்.

போராட்டத்தைதிசைதிருப்ப சிலர் முயற்சிக்கும் நிலையில், இனியும் அதனை தொடர முடியாது என்று தெரிவித்தார்.

இதேபோல் குடியரசு நாளில் டெல்லியில் நடந்த வன்முறை சம்பவங்கள் வேதனை அளிப்பதாகவும், எனவே 58 நாள் போராட்டத்தை இத்துடன் முடித்துக் கொள்வதாகவும் பாரதிய கிசான் யூனியன் தலைவர் தாகூர் பானு பிரதாப் சிங்கும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, செய்தியாளர்களிடம் பேசிய மத்திய அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர், விவசாயிகள் போராட்டத்தை காங்கிரஸ் தூண்டி விடுவதாக குற்றம் சாட்டினார்.

மேலும் வேளாண் சட்டங்கள் தொடர்பாக விவசாயிகளுடன் மத்திய அரசு பேச்சு நடத்த தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் சிங்கு எல்லையில் சம்யுக்த கிசான் மோர்ச்சா உறுப்பினர்களின் ஒருங்கிணைந்த செய்தியாளர் சந்திப்பு கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

அப்போது பேசிய விவசாயத் தலைவர் பால்பீர் எஸ் ராஜேவால், பெப்ரவரி 1 ஆம் திகதி நாடாளுமன்றம் நோக்கி மேற்கொள்ளவிருந்த பேரணி டெல்லியில் ஏற்பட்ட வன்முறை காரணமாக தற்போதைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

## இந்தியா – அமெரிக்கா உயர்மட்ட பேச்சு; பைடனின் நிலைப்பாட்டை உறுதி செய்த ஆலோசகர்



அமெரிக்கா அதிபராக ஜோ பைடன் பொறுப்பேற்ற பிறகு முதல் முறையாக அமெரிக்கா, இந்தியா இடையிலான உயர்மட்ட பேச்சு நடைபெற்றது. அமெரிக்க பாதுகாப்புத் துறை மந்திரி ஆஸ்டின், இந்திய பாதுகாப்புத் துறை மந்திரி ராஜ்நாத் சிங்கை தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார்.

இந்த பேச்சின்போது பன்முக பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான கூட்டமைப்பு யுக்தியை மேலும் வலுப்படுத்த, ஒன்றிணைந்து பணியாற்றுவதற்கான தங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தினர்.

அதன்பின்னர், இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், அமெரிக்கா பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன் ஆகியோர் தொலைபேசி மூலம் பேச்சு நடத்தியுள்ளனர் என வெள்ளை மாளிகை தெரிவித்தது.

பாதுகாப்பை உறுதிப்படுத்துவது, கொரோனா மற்றும் பருவநிலை மாற்றம் உள்ளிட்ட சவால்களை எதிர்கொள்வது தொடர்பாக பாதுகாப்பு ஆலோசகர்கள் ஆலோசனை மேற்கொண்டனர். அப்போது, அமெரிக்கா – இந்தியா கூட்டமைப்புக்கான அதிபர் ஜோ பைடனின் நிலைப்பாட்டை அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகர் சல்லிவன் உறுதிப்படுத்தி உள்ளார்.

## ஐ.நா.பாதுகாப்பு சபையில் இந்தியாவுக்கு நிரந்தர இடம் விவாதத்திற்கு உரியது; ஐ.நா.வுக்கான அமெரிக்க தூதுவர்



ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில் இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு நிரந்தர உறுப்பினர் பதவி வழங்கும் விவகாரம் விவாதத்திற்கு உரியது என ஐ.நா.வுக்கான அமெரிக்க தூதராக நியமிக்கப்படவுள்ள லிண்டா தோமஸ் – கிரீன்ஃபீல்டு கூறியுள்ளார்.

செனட் வெளியுறவுக் குழுவில் ஆஜரான லிண்டாவிடம், இந்தியா, ஜேர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு ஐ.நா.பாதுகாப்பு கவுன்ஸிலில் நிரந்தர உறுப்பினர் பதவி வழங்க வேண்டும் என நினைக்கிறீர்களா என்று செனட் குழு உறுப்பினர் கேள்வி எழுப்பினார்.

அதற்கு அது விவாதத்திற்கு உரிய பிரச்சினை எனப் பதிலளித்தார்.

ஜார்ஜ் புஷ், ஒபாமா, ட்ரம்ப் நிர்வாகங்கள், இந்தியாவுக்கு ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில் நிரந்தர உறுப்பினர் பதவி வழங்க வேண்டும் என வெளிப்படையாகக் கூறிவந்தன.

ஜோ பைடன் நிர்வாகத்தின் கீழ், புதிதாக நியமிக்கப்படவுள்ள ஐ.நா. தூதரின் கருத்து அதிலிருந்து மாறுபட்ட குரலில் இருப்பதாக கருதப்படுகிறது.



தமிழக முதலமைச்சராகவும், அ.தி.மு.க.வின் பொதுச்செயலாளராகவும் இருந்து மறைந்த ஜெயலலிதாவின் வேதா இல்லம் திறந்து வைக்கப்பட்ட பின், சென்னை மெரினா கடற்கரையில் உள்ள லேடி வெலிங்டன் கல்லூரி உயர்கல்வி மன்ற வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஜெயலலிதாவின் முழு உருவச்சிலையையும் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி திறந்துவைத்தார்.

## தேசிய மாணவர் படை நிகழ்ச்சியில் இன்று பிரதமர் மோடி பங்கேற்பு!



எல்லைப் பகுதிகள், கடலோரப் பகுதிகளில் பாதுகாப்பை வலுப்படுத்தத் தேசிய மாணவர் படையினர் ஒரு லட்சம் பேருக்கு முப்படையினரால் பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாகப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

டெல்லி கரியப்பா மைதானத்தில் நடைபெற்ற தேசிய மாணவர் படையின் நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி கலந்துகொண்டு அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். தேசிய மாணவர் படையின் கலைக்குழுவினர் நடத்திய கலைநிகழ்ச்சிகள் பார்வையாளர்களின் கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் இருந்தன.

நிகழ்ச்சியில் சிறப்புரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, புயல் வெள்ளம் போன்ற இயற்கைப் பேரிடர்களின் போது தேசிய மாணவர் படையினர் விரைந்து சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்ததை நினைவுகூர்ந்தார். கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் தேசிய மாணவர் படையைச் சேர்ந்த லட்சக்கணக்கானோர் அரசுடனும், சமுதாயத்துடனும் இணைந்து செயல்பட்டது பாராட்டத்தக்கது எனக் குறிப்பிட்டார்.

தேசிய மாணவர் படையின் பங்கை மேலும் விரிவாக்க அரசு முயற்சி மேற்கொண்டு வருவதாகவும், எல்லைப்பகுதிகளிலும் கடலோரப் பகுதிகளிலும் தேசிய மாணவர் படையின் பங்களிப்புடன் பாதுகாப்பை வலுப்படுத்த ஊக்கமளிப்பதாகத் தெரிவித்தார்.

இதற்காக ஒரு லட்சம் மாணவர்களுக்கு முப்படைகளால் பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டார். இத்தகைய பயிற்சி பெறுவோரில் மூன்றில் ஒரு பகுதியினர் மாணவியர் என்றும் குறிப்பிட்டார்.

## ஜெயலலிதா பிறந்த நாள், அரசு விழாவாகக் கொண்டாடப்படும்



சென்னை மெரினா கடற்கரை சாலையில் உள்ள லேடி வெலிங்டன் கல்லூரி உயர்கல்வி மன்ற வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஜெயலலிதாவின் 9 அடி உயர மான முழு உருவச்சிலையையும் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி திறந்துவைத்தார்.

ஜெயலலிதாவின் பிறந்த நாளான பெப்ரவரி 24ஆம் திகதியன்று அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என்று ஜெயலலிதாவின் வெண்கலச் சிலையை திறந்து வைத்து பேசிய முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி அறிவித்தார்.

ஜெயலலிதா பிறந்த நாளன்று, அரசு சார்பில் ஜெயலலிதா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

# அமெரிக்காவில் இனவெறிக்கு முற்றுப்புள்ளி அதிரடி நடவடிக்கையில் இறங்கிய பைடன்



அமெரிக்காவில் நீண்டகாலமாக இன ரீதியிலான தாக்குதல்கள் தொடர்ந்து வருகின்றன. குறிப்பாக கறுப்பின மக்கள் அதிக அளவில் இனவெறி தாக்குதலுக்கு ஆளாகி வருகின்றனர்.

கடந்த ஆண்டு மே மாதம் அமெரிக்காவின் மினசோட்டா மாகாணம், மினியாபொலிஸ் நகரில் ஜோர்ஜ் பிளாய்ட்(வயது 46) என்ற கறுப்பினத்தைச் சேர்ந்தவரை பொலிஸார் சந்தேகத்தின் அடிப்படையில் மடக்கிப் பிடித்தனர். அப்போது, டெர்ரக் சவுவின் (44) என்ற பொலிஸ்காரர், பிளாய்டை கீழே தள்ளி அவரது கழுத்தில் காலை வைத்து பலமாக அழுத்தினார். இதில் மூச்சுத்திணறல் ஏற்பட்டு அவர் பரிதாபமாக இறந்தார்.இதையடுத்து ஜோர்ஜ் பிளாய்ட்டின் சாவுக்கு நீதி கேட்டும் இனவெறிக்கு எதிராகவும் தலைநகர் வொஷிங்டன் உட்பட அமெரிக்கா முழுவதும் போராட்டம் வெடித்தது.மேலும் இந்தப் போராட்டம் அமெரிக்கா மட்டுமின்றி உலகின் பல நாடுகளிலும் எதிரொலித்தது.

இந்தப் போராட்டம் அப்போதைய ஜனாதிபதி ட்ரம்ப் நிர்வாகத்துக்கு பெரும் தலைவலியாக அமைந்தது. மேலும் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயக கட்சியினர் ஜோர்ஜ் பிளாய்ட் விவகாரத்தை சுட்டிக்காட்டி ட்ரம்புக்கு எதிராக பிரசாரம் செய்தனர்.

அது மட்டுமின்றி தேர்தலில் ட்ரம்பை எதிர்த்துப் போட்டியிட்ட ஜனநாயக கட்சி வேட்பாளர் ஜோ பைடன், தான் ஆட்சிக்கு வந்தால் அமெரிக்காவில் நீண்ட காலமாகப் பாதிப்பை ஏற்படுத்தி வரும் இனவெறிக்கு முற்றுப்புள்ளி வைத்து இன சமத்துவத்தை உருவாக்க பாடுபடுவேன் என வாக்குறுதி அளித்தார்.

இந்த நிலையில் ஜனாதிபதி ஜோ பைடன் தேர்தலின்போது தான் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் விதமாக பல நிர்வாக உத்தரவுகளை பிறப்பித்து வருகிறார்.

அந்த வகையில் அமெரிக்காவில் இனவெறிக்கு முற்றுப்புள்ளி வைத்து இன சமத்துவத்தை ஏற்படுத்துவது தொடர்பான 4 நிர்வாக உத்தரவுகளில் ஜோ பைடன் நேற்று முன்தினம் கையெழுத்திட்டார். அதன்பிறகு ஜனாதிபதி ஜோ பைடன் வெள்ளை மாளிகையின் ஓவல் அலுவலகத்தில் பத்திரிகையாளர்களைச் சந்தித்தார். அப்போது இனவெறிக்கு எதிரான புதிய நிர்வாக உத்தரவு குறித்து அவர் கூறியதாவது:-

ஜனாதிபதி தேர்தலுக்கான எனது பிரசாரத்தில் அமெரிக்கா ஆழ்ந்த இன ஏற்றத்தாழ்வுகளையும் கடுமையான இன வெறியையும் எதிர்கொள்ளும் ஒரு தேசமாக மாறியிருப்பதை நான் மிகவும் தெளிவாக கூறியிருந்தேன்.

வெளிப்படையாக கூறினால் இந்த தேசத்தின் கொள்கைகளுக்கு நாம் ஒருபோதும் முழுமையாக வாழ்ந்ததில்லை. எல்லா மக்களும் சமமாக உருவாக்கப்படுகிறார்கள். அவர்களின் வாழ்நாள் முழுவதும் சமமாக நடத்தப்படுவதற்கான உரிமை உண்டு. எனவே இது நாம் செயல்பட வேண்டிய நேரம். சரியான செயல் என்பதோடு மட்டுமல்லாமல் நாம் இதைச் செய்தால் நாம் அனைவரும் அதற்கு சிறந்தவர்களாக இருப்போம். இனவெறியை வேரறுக்க முதல் நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமாகவும் சமத்துவமின்மையை வேரறுக்க தைரியமான மற்றும் இலட்சிய நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமும் நாடு முழுவதும் உள்ள குடும்பங்களுக்கு அமெரிக்க கனவை நனவாக்குவதற்கான எனது நிர்வாகத்தின் உறுதிப்பாட்டை தெரிவிக்கிறேன்.

ஒற்றுமையும், நற்குணமும், புரிதலுடனும், உண்மையுடனும் தொடங்கவேண்டும் அறியாமை மற்றும் பொய்களால் அல்ல. - இவ்வாறு ஜோ பைடன் கூறினார்.

# ரஷ்ய அதிபர் புடினுடன் ஜோ பைடன் உரையாடல்



அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள ஜோ பைடன், ரஷ்ய அதிபர் புடினை நேற்று தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். இந்த உரையாடலின்போது அமெரிக்காவின் தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு தொடர்பாக புடினிடம் எச்சரிக்கை விடுத்த ஜோ பைடன், அந்த நாட்டில் நிலவி வரும் எதிர்க்கட்சித் தலைவர் அலெக்சி நாவல்னிக்கு ஆதரவான போராட்டங்கள் குறித்தும், இருநாடுகளுக்கிடையேயான அணுசக்தி ஒப்பந்தம் குறித்தும் பேசியுள்ளார் என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

"எங்களுக்கு அல்லது எங்கள் நட்பு நாடுகளுக்கு தீங்கு விளைவிக்கும் ரஷ்யாவின் நடவடிக்கைகளுக்கு பதிலளிக்கும் வகையில் அமெரிக்கா தனது தேசிய நலன்களைப் பாதுகாப்பதில் உறுதியாக செயல்படும் என்பதை ஜனாதிபதி ஜோ பைடன் தெளிவுபடுத்தினார்".

ஆனால், இந்த தொலைபேசி உரையாடல் தொடர்பாக ரஷ்ய அதிபர் மாளிகையான கிரெம்ளின் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஜோ பைடன் பேசியுள்ளார் என வெள்ளை மாளிகை தெரிவித்த எந்த ஒரு விடயமும் குறிப்பிடப்படவில்லை.

"ரஷ்யாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான உறவுகளை இயல்பாக்குவதன் மூலம் இரு நாடுகளின் நலன்களையும் உறுதி செய்வது குறித்தும், உலக நாடுகளின் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை பேணுவதில் இரு நாடுகளுக்கும் உள்ள சிறப்பு பொறுப்பு குறித்தும் இருநாட்டு தலைவர்களும் பேசியுள்ளனர்" என்று கிரெம்ளின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும், இந்த உரையாடலின்போது அமெரிக்க - ரஷ்ய அணு ஆயுத போர்க்கப்பல்கள் மற்றும் ஏவுகணைகளின் அளவைக் கட்டுப்படுத்தும் ஒபாமா கால ஒப்பந்தமான 'நியூ ஸ்டார்ட்' ஒப்பந்தத்தை புதுப்பிக்க இருநாட்டு தலைவர்களும் ஒப்புக்கொண்டுள்ளனர் எனத் தெரிகிறது.

# வியட்நாமில் ஒரே நாளில் 83 பேருக்குக் கொரோனா



வியட்நாமில், 54 நாள்களாக யாருக்கும் கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்படாத நிலையில், தற்போது ஒரே நாளில் 83 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று பரவத் தொடங்கியதும் அண்டை நாடுகளுடனான எல்லைகளை மூடியமையால், வியட்நாமில் இதுவரை 1,550 பேர் மட்டுமே கொரோனாவால் பாதிக்கப்பட்டிருந்தனர். இந்நிலையில், தலைநகர் ஹனோய் அருகே மின்னணு தொழிற்சாலையில் பணியாற்றும் 83 பேருக்குக் கொரோனா உறுதி செய்யப்பட்டது.

இதையடுத்து அந்தத் தொழிற்சாலை மூடப்பட்டு, அங்கு பணியாற்றிய 2,340 ஊழியர்கள் தனிமைபடுத்தப்பட்டனர்.

# உலகில் மிகவும் ஆபத்தான மெராபி எரிமலை இந்தோனேசியாவில் வெடித்துச் சிதறத் தொடங்கியது



உலகில் மிகவும் ஆபத்தான எரிமலைகளில் ஒன்றான இந்தோனேசியாவின் மெராபி எரிமலை வெடித்து சிதறத் தொடங்கியுள்ளது.

மத்திய ஜாவா மாகாணத்தில் 9 ஆயிரத்து 721 அடி உயரம் உள்ள மெராபி எரிமலை வெடித்துச் சாம்பலை உமிழ்ந்து வரும் காட்சி சமூக வலைதளங்களில் வெளியாகியுள்ளது.

இதனையடுத்து, எரிமலை வெடிப்பு காரணமாக அதனை சுற்றியுள்ள கிராமங்களில் கடும் வெப்பம் நிலவி வரும் சூழலில், அப்பகுதி அருகே சாலையில் செல்லும் மக்கள் எச்சரிக்கையுடன் செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# 5 வயது சிறுவன் கார் ஓட்டும் வீடியோ வைரல்



பாகிஸ்தானில் 5 வயது சிறுவன் ஒருவன், 'லேண்ட் க்ரூசர்' கார் ஓட்டிச் செல்லும் வீடியோ காட்சி சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

முல்தானில் சிறுவன் ஒருவன் கார் ஓட்டிச் செல்வதை கண்டு அதிர்ச்சியடைந்த நபர் ஒருவர், அதனை படம் பிடித்து இணையத்தளத்தில் வெளியிட்டுள்ளார்.

சிறுவன் நின்றுகொண்டே கார் ஓட்டிச் செல்லும் காட்சி இணையத்தளத்தில் வைரலாகி வரும் நிலையில், இது மிகவும் ஆபத்தான செயல் என பலரும் கருத்து தெரிவித்து வருகின்றனர். இத னையடுத்து, சம்பவம் தொடர்பாக சிறுவனின் பெற்றோர்களை பொலிஸார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

# விஸ்வரூபம் எடுத்து வரும்....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

- இங்ஙனம்

வடக்கு, கிழக்கு சிவில் சமூக அமைப்புகள்.

வடக்கு, கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம்

அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் இணையம் - கிளிநொச்சி.

கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசாரபீட மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு

சிவகுரு ஆதீனம் - யாழ்ப்பாணம்

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் - மட்டக்களப்பு

மறுமலர்ச்சி பெண்கள் அமைப்பு - மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்ட பல் சமயங்களின் ஒன்றியம்

மட்டக்களப்பு மாவட்ட முதியோர் அமைப்புக்களின் சம்மேளனம்

தமிழ் உணர்வாளர்கள் அமைப்பு - மட்டக்களப்பு

வெண்மயில் அமைப்பு - மட்டக்களப்பு

தயா நிலம் அறக்கட்டளை - யாழ்ப்பாணம்

குருந்தூர் மலை ஆதி சிவன் ஐயனார் ஆலயம் - முல்லைத்தீவு

வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயம் - வவுனியா வடக்கு

சமூகமட்ட அமைப்புக்களின் சம்மேளனம் - கிளிநொச்சி

ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் - வேற்றுச்சேனை, வெல்லாவெளி, மட்டக்களப்பு

தென்கைலை ஆதீனம், கன்னியா, திருகோணமலை

தமிழர் மரபுரிமை பேரவை - முல்லைத்தீவு.

# எச் - 4 விசா மூலம் அமெரிக்கா செல்பவர்கள் அங்கு பணியாற்ற அனுமதி; பைடன் உத்தரவு

*அமெரிக்காவிற்கு எச் - 1பி விசாவில் சென்று பணியாற்றும், வெளிநாட்டினரின் மனைவி அல்லது கணவர் ஆகியோருக்கு எச் - 4 விசாக்கள் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 2015 ஆம் ஆண்டு வரை எச் - 4 விசாவில் செல்பவர்கள், அமெரிக்காவில் பணியாற்றத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இந்த தடை ஒபாமா ஆட்சிக் காலத்தில் நீக்கப்பட்டது.*

*இருப்பினும், ட்ரம்ப் அதிபராக பதவியேற்ற பிறகு இந்த தடை மீண்டும் அமுல்படுத்தப் பட்டது. இந்நிலையில் இந்த தடையை நீக்கி அதிபர் ஜோ பைடன் உத்தரவிட்டுள்ளார்.*

# ‘ஓம் நமசிவாய’ உச்சரிக்க குருந்தூர் மலையில் தடை!

## விதித்து இராணுவம் அட்டகாசம் துன்பத்தில் துவளும் பக்தர்கள்

வடக்கைச்சேர்ந்த சைவ சமய அமைப்புக்கள் நேற்று புதன்கிழமை முல்லைத்தீவு குருந்தூர் மலைக்குச் சென்ற போது, அவர்களை இரண்டு மணிநேரமாக இராணுவம் விசாரணை செய்த தோடு மலையில் வழிபாடுகள் எதனையும் செய்யமுடியாது என நிபந்தனை விதித்து உள்ளே செல்ல அனுமதித்துள்ளனர்.

நேற்று புதன்கிழமை மதியம் 1.30 மணியள வில் வடக்கிலுள்ள சைவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் சுமார் 25 பேர் குருந்தூர் மலைக்கு சென்றனர். அங்கு கடமையிலிருந்த இராணு வத்தினர், அவர்களை மலைக்கு செல்ல அனும திக்க முடியாது எனத் தடைவிதித்து சுமார் இரண்டரை மணித்தியாலத்துக்கும் மேலாக, மலையடிவாரத்தில் வருகை தந்த குழு காக்க வைக்கப்பட்டிருந்தது. பல்வேறு தரப்பினரை யும் தொடர்பு கொண்டு பேசிய பின்னர், மலைக்கு செல்ல இராணுவத்தினர் நிபந்தனை யுடன் அனுமதி வழங்கியுள்ளனர்.

அதாவது மலையில் தேவாரம் பாடமுடியாது, பூசை செய்யமுடியாது, கற்பூரம் கொண்டு செல்ல முடியாது, பூக்கள் கொண்டு செல்லமுடி யாது என நிபந்தனைகள் விதிக்கப்பட்டதோடு மலையில் ஏறும்போது ‘ஓம் நமசிவாய’ என ஒரு பக்தர் கூறிய போது படையினர் அதற்கு அனுமதிக்காது அவ்வாறு எதுவும் சொல்ல வேண்டாம் எனத் தடை விதித்துள்ளனர்.

வந்தவர்களை சிவசேனை அமைப்பினரா என இராணுவத்தினர் விசாரணை செய்தனர். அங்கு சென்றவர்கள் அதை மறுத்து, சிவசேனை யினர் வரவில்லையென்றனர். ஊடகவியலா ளர்கள் யாராவது இருக்கிறார்களா என்றும் இராணுவத்தினர் விசாரணை நடத்தினர்.

வருகைதந்த அனைவரதும் பெயர், அடையாள அட்டை இலக்கங்கள் பதிவு செய்யப்பட்ட பின்னரே அனைவரும் மலையில் ஏற அனும திக்கப்பட்டனர். புலனாய்வாளர்கள், இராணு வம் சேர்ந்து வந்த பக்தர்களை ஆலயத்துக்கு அழைத்து சென்றிருந்தனர்.

கடந்த வாரம் முல்லைத்தீவு குருந்தூர் மலைக்கு செல்வதற்குத் தடையில்லை என வும் அங்கு சூலம் உடைக்கப்படவில்லையென வும் பக்தர்கள் அங்கே சென்று தடையின்றி வழிபடலாம் எனவும் இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதா னந்தன் கருத்து வெளியிட்டிருந்தமையும் குறிப் பிடத்தக்கது.

# ஜனநாயகம் குறித்து இலங்கைக்கு யாரும் கற்பிக்கத் தேவையில்லை!

## வெளிவிவகார அமைச்சின் செயலாளர் வீறாப்பு

ஜனநாயகம், மனித உரிமைகள், அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்களை எவ்வாறு மேற்கொள்வது என்பவை தொடர்பாக எவரும் கற்றுக்கொடுக்கவேண்டிய நிலையில் இலங்கை இல்லை என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயனத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் பைடனின் வெற்றி முக்கியமானது என்பதை வலியுறுத்தியுள்ள அதே வேளை, பைடன் தனது நாட்டில் ஒழுங்கை ஏற்படுத்தவேண்டிய நிலையில் ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் மீள ஏற்படுத்தவேண்டிய நிலையில் காணப்படுகின்றார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆங்கில ஊடகமொன்றுக்குக் கருத்து வெளியிட்டுள்ள அவர், அமெரிக்காவில் இவை கடந்த வருடம் அழிக்கப்பட்டுவிட்டன எனவும் தெரிவித்துள்ளார்.

மீறல்களில் ஈடுபடுபவர்களையும் வன்முறைகளையும் ஏனைய நாடுகளிலேயே காண்கின்றோம் இலங்கையில் இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா மீண்டும் மனித உரிமை பேரவையில் இணைந்து கொள்ளக்கூடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா உலகின் மனித உரிமைகள் தொடர்பாக நேர்மையான அக்கறையை கொண்டிருந்தால் இலங்கை மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் நாடில்லை என்பதையும் நாட்டில் தற்போது அமைதி நிலவுகின்றது என்பதையும் நாங்கள் நினைவுபடுத்த வேண்டியிருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கை ஒரு வன்முறைநாடில்லை. இங்கு வன்முறைகள் இடம்பெறவில்லை. ஏனைய நாடுகளில் இடம்பெறும் சிறிய சம்பவங்களே இடம்பெறுகின்றன என குறிப்பிட்டுள்ள அவர், இலங்கையில் இன மத ஐக்கியம் நிலவுகின்றது என்றும் இதனை ஏனைய நாடுகளுடன் பகிர்ந்துகொள்ளத் தயாராகவுள்ளோம் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பைடனின் நிர்வாகம் காழ்ப்புணர்ச்சி மற்றும் தீவிர



வலதுசாரி கருத்துக்கள் மற்றும் அணுகுமுறைகளைத் தடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதேநேரம், அதிக எண்ணிக்கையிலான அமெரிக்கர்களைக் கொன்று குவிக்கும் கொரோனாவை எதிர்த்துப் போராட வேண்டும் என்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயனத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

ஜோ பைடன் தலைமையிலான அமெரிக்காவின் புதிய நிர்வாகம் தொடர்ந்தும் மனித உரிமை விவகாரங்களில் இலங்கைக்கு அழுத்தங்களை கொடுக்கும் என இலங்கைக்கான தூதுவர் அலைனா டெப்பிளிட்ஸ் அண்மையில் தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

SCIENCE ACADEMY NALLUR ARIYALAI JAFFNA
சயன்ஸ் அக்கடமி
நல்லூர் முருகன் ஆலயம் முன்பாக
நாவலர் வீதி, அரியாலை
தரமான கல்வியை என்றும் வழங்கும் முதற் தர நிறுவனம்
நிகரற்ற சிறப்பான நிர்வாக கட்டமைப்பின் கீழ் யாழ் முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த வழிகாட்டலில் 40 வருடங்களுக்கு மேலான கல்வி பாரம்பரியத்தில் என்றும் முன்னணியில் திகழும் எமது நிறுவனம் சாதனை ஆண்டில் தொடர்கின்றது.
புதிய கல்வியாண்டு - 2021
வெற்றித்தேர்வு ஆரம்ப பிரிவு
தரம் 1 முதல் தரம் 5 வரை
வாராந்தம் பரீட்சைகளோடு
தமிழ் மொழி மூல வகுப்புகள்
தரம் 6 முதல் O/L வரை
ENGLISH MEDIUM CLASSES
GRADE 6 - O/L
இவற்றுடன் ICT, ENGLISH LITERATURE, சிங்களம் ஆகிய பாடங்களும்
வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன..
இவை அனைத்தும் ஒரே இடத்தில் பெற்று சாதனை படையுங்கள்!
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
“எம்முடன் இணைந்தோர் உயர்கல்வி பெற்றோரே”
077 5388471, 077 3126807, 021 222 9016

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
|---|---|
| பிறந்த திகதி - 1979.04.15 | பிறந்த திகதி - 1979.12.05 |
| மதம் - இந்து V | மதம் - இந்து V |
| நட்சத்திரம் - விசாகம் | நட்சத்திரம் - திருவாதிரை |
| செவ் - 1 இல் | செவ் - 8 இல் |
| பாவம் - 55 | பாவம் - 53 1/2 |
| கல்வி - A/L | ல்வி - A/L |
| தொழில் - UK PR | தொழில் - UK PR |
| எதிர்பார்ப்பு - UK வரவிரும்பும் பெண் | எதிர்பார்ப்பு - UKல் விவாகரத்தான மணமகன் தேவை |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.
குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை
077 3434 415
077 8578 528

மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!
நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த
ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள்
யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.
விலை - 150/=







கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.01.2021இல் வெளியிடப்பெற்றது.